பக்கங்கள் 20 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 20 புதன்கிழமை 04.03.2026 | அதிர்வு 216

## இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பையும் மீறி தாக்குதல் நடந்ததா?

**நாமல் சரமாரி கேள்வி**



இலங்கைக் கடற்படை பாதுகாப்பு வழங்க வேண்டிய ஒரு வலயத்துக்குள்

05

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இலங்கை கடற்பரப்பில் அதிகாலை ஈரானியப் போர்க்கப்பல் மூழ்கடிப்பு

## 101 பேர் மாயம் | 78 பேர் காயம்

## 32 பேர் மீட்கப்பட்டு காலி வைத்தியசாலையில் அனுமதி

இலங்கையின் தென் கடற்பரப்பில் காலி துறைமுகத்திலிருந்து சுமார் 25 மைல் தொலைவில், ஈரானிய கடற்படைக்குச் சொந்தமான 'ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா' எனும் போர்க்கப்பல் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கியுள்ளத் என்று பாதுகாப்புத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 180 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் பயணித்த இந்த 'மௌஜ்' ரக போர்க்கப்பல், இன்று அதிகாலை விபத்துக்குள்ளானது. இது ஒரு வெளிநாட்டு நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைத் தாக்குதலினால் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

05

### மத்திய கிழக்கு மோதல்:

# இலங்கையின் பொருளாதார சவால்களை முறியடிக்க ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று உயர்மட்டப் பேச்சு

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போதைய போர்ச் சூழல் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் அதை நிர்வகிக்க எடுக்கக்கூடிய உடனடி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

06



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# 2026 அபிவிருத்திப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் உத்தரவு





2026ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை எவ்வளவு விரைவாக நிறைவு செய்ய முடியுமோ அவ்வளவு துரிதமாக நிறைவு செய்யுமாறும், அதற்காகத் தேவைப்படும் தொழில்நுட்ப ஆளணியின் ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, மின்சக்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஆகிய அமைச்சுக்களின் இந்த ஆண்டுக்கான செயற்றிட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் செயலகத்தில் இன்று புதன்கிழமை காலை ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்த ஆண்டுக்குரிய முதலாவது அமைச்சுசார் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமாக இது அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டதுடன், கடந்த ஆண்டுக்குரிய அபிவிருத்தித் திட்டங்களைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தியமைக்காக அதிகாரிகளுக்குத் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், மாகாண சபையின் வழமையான நிதி, "டித்வா" பேரிடர் பாதிப்புக்கான நிதி, மத்திய நிரல் அமைச்சுக்களின் நிதி, மாவட்டச் செயலகங்களின் நிதி, உள்ளூராட்சி மன்றங்களின் சபை நிதி மற்றும் முத்திரைத் தீர்வை நிதி எனப் பல்வேறு நிதி மூலங்களினூடான வேலைத்திட்டங்களை நாம் இந்த ஆண்டு முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும். எமக்கு இப்போதுள்ள சாதகமான காலநிலையைப் பயன்படுத்திப் பணிகளை விரைவாக ஆரம்பிப்பது இலகுவானது. எனவே, திட்டங்களை உரிய காலவரையறைக்குள் நிறைவு செய்வதுடன், அவற்றின் உயர்தரத்தையும் அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

குடிபுகுச் சான்றிதழ் இன்றி இயங்கும் வர்த்தக நிறுவனங்களால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்படும் வருமான இழப்புகள் தொடர்பில் ஆளுநர் விசேட கவனம் செலுத்தினார். "குடிபுகுச் சான்றிதழ் இல்லையென்பதைக் காரணங்காட்டி உரிய வரி அறவீடுகள் செய்யப்படாமையால், சபைகளுக்குப் பெரும் நிதி இழப்பு ஏற்படுகின்றது. இதனை மறுசீரமைக்குமாறு பல தடவைகள் அறிவுறுத்தியுள்ளேன். இதற்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். ஆகக் குறைந்தது 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட கட்டடங்களுக்காவது இதனை இறுக்கமாக நடைமுறைப்படுத்துங்கள் என்றும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

மேலும், கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட தெருநாய்களைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்தை இந்த ஆண்டும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துமாறும், லஞ்சீட் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாகச் செயற்படுகின்றமைக்குப் பாராட்டுத் தெரிவித்த அவர், அதனைத் தொடர்ந்தும் இறுக்கமாகப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொண்டார். நகரப் பகுதிகளில் இடம்பெறும் ஒலிபெருக்கி விளம்பரச் சேவைகள் தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைச் சகல உள்ளூராட்சி மன்றங்களும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் எனவும், மரம் நடுகைத் திட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான ஒவ்வொரு திணைக்களங்களினதும் துறைசார் முன்னேற்ற மீளாய்வுகள் நடைபெற்றன. 2026ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் தற்போது கோரப்பட்டு வருவதாக இதன் போது அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நடைபெற்ற திறந்த கலந்துரையாடலின்போது, உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வீதிகளைப் புனரமைப்பதற்கு மாவட்டச் செயலகங்கள் தெரிவு செய்யும்போது, உள்ளூராட்சி மன்றங்களிடம் எவ்வித ஆலோசனைகளும் பெறப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்கள் தமது சொந்த நிதியிலோ அல்லது வேறு திட்டங்களின் கீழோ வீதிகளைப் புனரமைக்கத் தீர்மானித்திருக்கும் நிலையில், அதே வீதிகளை வேறொரு திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கு மாவட்டச் செயலகங்கள் தன்னிச்சையாகத் தீர்மானங்கள் மேற்கொள்வதால் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பில் ஆளுநரின் கவனம் ஈர்க்கப்பட்டது.

அத்துடன், மாவட்ட செயலகங்களால் வழங்கப்படும் வேலைகளை முன்னெடுக்கும்போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமான நிர்வாகச் செலவீனங்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்விடயங்கள் தொடர்பில் மாவட்டச் செயலாளர்களுடன் விசேடமாகக் கலந்துரையாடி உரிய தீர்வு பெற்றுத்தரப்படும் என ஆளுநர் இதன் போது உறுதியளித்தார்.

முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், மாகாணப் பணிப்பாளர்கள், மாநகர சபைகளின் ஆணையாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

# தரம் குறைந்த நிலக்கரியால் 8,497 மில்லியன் ரூபா நட்டம்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆதாரங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்து சஜித் பிரேமதாஸ சாடல்



தற்போதைய அரசு தென்னாபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்த நிலக்கரி தரம் குறைந்தவை என்பது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இதனால் நாட்டுக்கு 8,497 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இன்று நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியுடன் ஒப்பிடும்போது, தென்னாபிரிக்க நிலக்கரி தரம் குறைந்தது என்பதை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.


எதிர்பார்க்கப்படும் 5900 - 6200 மட்டத்தை தென்னாபிரிக்க நிலக்கரி எட்டத் தவறிவிட்டது.

ரஷ்ய நிலக்கரி ஒரு கிலோவாட் மணிக்கு 0.46 கிலோ சாம்பலை உருவாக்கும் நிலையில், தென்னாபிரிக்க நிலக்கரி 0.93 கிலோ சாம்பலை உருவாக்குகின்றது. இது 102 வீத அதிகரிப்பாகும்.

தரம் குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதால் லக்விஜய (நுரைச்சோலை) மின் உற்பத்தி நிலையத்தில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அங்கு 300 மெகாவாட் முழுமையான மின் உற்பத்தியை எட்ட முடியாமல் உள்ளது. அதிக சாம்பல் மற்றும் வெப்பநிலை காரணமாக கொதிகலன்கள் மற்றும் ஏனைய இயந்திரப் பாகங்கள் விரைவாகத் தேய்மானமடைகின்றன.

ஏற்கனவே கொண்டுவரப்பட்ட 9 கப்பல் நிலக்கரி தரம் குறைந்தவை என்பதை மறைக்கவே, அரசு தற்போது அவசரமாக மீண்டும் 5 நிலக்கரி கப்பல்களை (தலா 60,000 தொன்) கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. இது தரமின்மையை மறைமுகமாக ஒப்புக்கொள்வதாகும்.

நாட்டுக்கு வருடத்துக்கு 6 நிலக்கரி கப்பல்கள் தேவைப்படும் நிலையில், இவ்வாறான தரம் குறைந்த இறக்குமதிகள் மூலம் மக்கள் பணம் கொள்ளையடிக்கப்படுகின்றது. அமைச்சர்கள் இதனை மறுத்தாலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தரவுகள் ஊழலை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளன. இதற்கு அரசு நாட்டு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும்." - என்றார்.



### திருமலையில் அதிரடிச் சோதனை:

# துப்பாக்கி, 'ஐஸ்' போதைப்பொருளுடன் சிக்கிய முன்னாள் இராணுவச் சிப்பாய்!

திருகோணமலை மாவட்டத்தின் வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கந்தளாய், வான்எல, பன்சல்கொடல்ல பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கந்தளாய் பிராந்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, 1,450 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காகவே இந்த உள்ளூர் துப்பாக்கியைப் பயன்படுத்தியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர் வான்எல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவரைக் கந்தளாய் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# யாழ்ப்பாணத்தை பசுமை நகரமாக்க 'இம்பக்ட்' அணியினரின் மெகா திட்டம்

## ஆளுநர் தலைமையில் விசேட ஆலோசனை

யாழ்ப்பாணம் குடாநாட்டைப் பசுமையான மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறன்மிக்க ஒரு நகரமாக மாற்றியமைக்கும் உயரிய நோக்கோடு, "இம்பக்ட்" அணியினரால் "பசுமை யாழ்ப்பாணம்" எனும் விசேட செயற்றிட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மாதிரிச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது, இச்செயற்றிட்டம் தொடர்பில் இம்பக்ட் அணியினரால் ஆளுநருக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. இது வெறுமனே ஒரு மரநடுகைத் திட்டமாக மட்டுமன்றி, முழுமையானதொரு "காலநிலைத் தாங்குதிறன் இயக்கமாக" வடிவமைக்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 1,000 மரங்களை நடுகை செய்தல், நகர்ப்புறப் பகுதிகளில் ஒரு குறுங்காட்டை உருவாக்குதல், பாடசாலைகள் மற்றும் அரச, தனியார் நிறுவன வளாகங்களைச் சூழப் பசுமையாக்குதல், நகரத் தூய்மையைப் பேணுதல் மற்றும் 2 முதல் 3 சேதனப் பசளை அலகுகளை உருவாக்குதல் போன்ற முக்கிய செயன்முறைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போதைய சூழலில் மரநடுகை மற்றும் காடாக்கலானது ஒரு "கால நிலைத் தேவையாக" மாறியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நிலப்பரப்பின் வெப்பநிலையைக் குறைத்தல், நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரித்தல், மண்ணரிப்பைத் தடுத்தல், பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் பொது மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற பல நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

நடுகை செய்யப்படும் மரங்களில் குறைந்தது 80 சதவீதமானவற்றை உயிருடன் பேணுவது இத்திட்டத்தின் முக்கிய இலக்காகும். இதனை உறுதிப்படுத்துவதற்காகப் புவியியல் தகவல் முறைமை, மாதாந்தக் கண்காணிப்புகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் என்பன பயன்படுத்தப்படவுள்ளன. அத்துடன், இத்திட்டத்தின் நிலைப்பேறான தன்மையை உறுதிசெய்யும் பொருட்டு, மரங்களைத் தத்தெடுக்கும் வேலைத்திட்டம், தொண்டர் வலையமைப்புகளை உருவாக்குதல் மற்றும் நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போன்ற நீண்டகாலச் செயன்முறைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

செயற்றிட்டம் தொடர்பான விளக்கமளிக்கப்பட்ட பின்னர், இதனை நடைமுறைப்படுத்தும்போது எழக்கூடிய சவால்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் பல்வேறு பங்குதாரர்களின் பங்களிப்பு அவசியமென வலியுறுத்தப்பட்டது. அதற்கமைவாக, சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களுடனான விசேட கலந்துரையாடலொன்றை ஒழுங்கு செய்து, முன்மாதிரிச் செயற்றிட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்கள் தொடர்பில் ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்கும் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மேலும், தற்போதைய அரசால் முன்னெடுக்கப்படும் "தூய இலங்கை" செயற்றிட்டத்தின் கீழ், இத்திட்டத்தை எவ்வாறு ஒன்றிணைத்து முன்கொண்டு செல்லலாம் என்பது தொடர்பிலும் இதன்போது விவாதிக்கப்பட்டது.

இவ்விசேட கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ். மாநகர சபையின் பிரதி மேயர், யாழ். மாநகர சபை ஆணையாளர் மற்றும் பொறியியலாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள், இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் மற்றும் இம்பக்ட் அணியின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.









# ஹோர்மூஸ் நீரிணை முடங்கினால் இலங்கைக்கு எரிபொருள் கிடைக்குமா?

## விநியோகச் சங்கிலி குறித்து சஜித் எச்சரிக்கை

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு ஸ்திரமின்மை, இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இன்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசிடம் விளக்கங்களையும் கோரினார்.

"மத்திய கிழக்கின் பல்வேறு நாடுகளில் (சவூதி, ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், குவைத், ஓமான், பஹ்ரைன், இஸ்ரேல், லெபனான்) பணிபுரியும் இலங்கையர்களின் துல்லியமான எண்ணிக்கை எவ்வளவு?

போர் உக்கிரமடைந்தால், அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற விசேட விமான போக்குவரத்து அல்லது மாற்று வழிமுறைகள் தயார் நிலையில் உள்ளனவா?

தூதரகங்களில் 24 மணிநேர அவசர தொடர்பு சேவைகள் மற்றும் தங்குமிடம், மருத்துவ வசதி வழங்கும் அலகுகள் உள்ளனவா?



ஹோர்மூஸ் நீரிணை கடல்வழிப் பாதை பாதிக்கப்பட்டால், இலங்கைக்கான கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்ய மாற்று வழிகள் என்ன?

உலகச் சந்தையில் எரிபொருள் விலை உயர்வால் ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கத்தை முகாமைத்துவம் செய்ய பிற எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளதா?

வான்பரப்பு மூடப்பட்டதால் வெளிநாட்டு விமான நிலையங்களில் சிக்கியுள்ள இலங்கையர்களின் பாதுகாப்புக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்புடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்று ஏற்பாடுகள் என்ன?

வெளிநாடுகளில் இருந்து வரும் அந்நியச் செலாவணி குறையும் அபாயம் உள்ளதா? அதனைத் தடுக்க அரசு வகுத்துள்ள திட்டம் யாது?

தேயிலை ஏற்றுமதி மற்றும் கப்பல் போக்குவரத்துக்கான காப்புறுதி அதிகரிப்பால் ஏற்படும் பாதிப்புகளை அரசு எவ்வாறு கையாளப் போகின்றது?" – என்று அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வினவினார்.

சிங்கப்பூர் மற்றும் இந்தியாவிலிருந்து நாம் எரிபொருளைப் பெற்றாலும், அந்த நாடுகளுக்கே ஹோர்மூஸ் ஜலசந்தி வழியாகத்தான் கச்சா எண்ணெய் செல்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, இந்த விநியோகச் சங்கிலி குறித்த பூரண தெளிவுடன் அரசு செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கைக் கடற்படையின்...

ஈரானிய கப்பல் மீதான தாக்குதலுக்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய போதே அவர் இந்த கேள்வியை முன்வைத்துள்ளார் .

அவர் மேலும் உரையாற்றுகையில், "இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் அல்லது அதற்கு மிக அருகாமையிலுள்ள சர்வதேச கடற்பரப்பில் ஈரானிய கப்பல் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை கடற்படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று, காயமடைந்தவர்களை மீட்டு காலி போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் 101 பேர் காணாமல்போயுள்ளதாக அல்லது காணாமல் போயிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் இந்தக் கப்பல் எங்கிருந்து வந்தது? இது இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற சர்வதேச கடற்படைப் பயிற்சியில் கலந்து கொண்டுவிட்டு அரபிக் கடலை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த கப்பலா? அல்லது இலங்கையை நோக்கி வருகை தந்த கப்பலா ?

இலங்கைக் கடற்படை பாதுகாப்பு வழங்க வேண்டிய ஒரு வலயத்துக்குள் இத்தகைய தாக்குதல் எப்படி அனுமதிக்கப்பட்டது?

இந்த விவரங்களை அரசு வெளிப்படுத்த வேண்டும்." – என்றார்.

### இலங்கை கடற்பரப்பில்..

கப்பலில் இருந்தவர்களில் 101 பேர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்கள் கடலில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. இச்சம்பவத்தில் 78 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்ட 32 மாலுமிகள் மேலதிக சிகிச்சைக்காக காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையின் 2 கப்பல்கள் மற்றும் விமானப்படையின் ஒரு விமானம் தற்போது தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஈரான் – இஸ்ரேல் – அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையே நிலவும் போர் பதற்றத்தின் ஒரு பகுதியாகவே இத்தாக்குதல் பார்க்கப்படுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினர்.

பாதிக்கப்பட்ட மாலுமிகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவ மற்றும் மனிதாபிமான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் இன்று தெரிவித்தார்.

சர்வதேச கடல்சார் ஒப்பந்தங்களின்படி, மனிதாபிமான அடிப்படையிலேயே இந்த மீட்புப் பணிகளை இலங்கை முன்னெடுத்து வருகின்றது என்று கடற்படைப் பேச்சாளர் புத்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் இலங்கையின் தேசியப் பாதுகாப்பு மற்றும் சர்வதேச உறவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனக் கருதப்படுகின்றது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இலங்கையின்..

எதிர்காலத்தில் அதிகரிக்கக் கூடிய நிலமைகளை கணிப்பது சாத்தியமற்றது என்றாலும், அனைத்துத் துறைகளிலும் ஏற்படக் கூடிய சூழ்நிலைகளைத் தொடர்ந்து கண்காணித்து அந்த சவால் களை வெற்றிகொள்ள ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் மற்றும் எரிவாயு விநி யோகம் தொடர்பில் எதிர்காலத்தில் ஏற் படக்கூடிய சவால்கள் மற்றும் கையிருப்புத் தேவைகளை நிர்வகித்தல், சுற்றுலா, ஏற்றுமதி, முதலீடு போன்ற துறைகளிலும், உணவுப் பாதுகாப்பு குறித்து ஏற்படக்கூடிய நிலைமைகள் மற்றும் இதன் மூலம் இந்நாட்டில் பணவீக்கத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் தொடர்பிலும் அதை நிர்வகிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை கள் குறித்தும் இங்கு விரிவாகக் கலந் துரையாடப்பட்டன.

இந்த சூழ்நிலையால் இலங்கை தற்போது அடைந்துள்ள பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும், சாதாரண மக்களின் வாழ்க்கைக்கும் ஏற்படும் தாக்கத்தைக் குறைத்து, பணவீக்கத்தைக் கட்டுப்படுத் தும் வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அதிகாரி களுக்கு அறிவுறுத்தினார்.

தற்போதைய எரிபொருள் கையிருப்பு போதுமானதாக இருந்தாலும், எதிர்காலத் தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்ள தேவையான கையிருப்பு களைப் பேணுவது மற்றும் அதனை நிர்வகித்தல், உலக சந்தையில் ஏற்பட விருக்கும் எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்கள் குறித்து கவனம் செலுத் தப்பட்டதுடன், இந்த நிலைமைகளை நிர்வகிப்பது

குறித்து கவனம் செலுத்திய ஜனாதி பதி, இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

எரிவாயு கையிருப்புகளைப் பேணு வதற்கு போதுமான களஞ்சிய வசதிகள் இல்லாததால் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளைத் தேடுவது குறித்தும், அதற்காக பின்பற் றக்கூடிய குறுகிய கால மூலோபாயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சூயஸ் கால்வாய் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி போன்ற இடங்கள் மூடப்பட்டதால் கப்பல் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகள் காரணமாக கொழும்பு துறைமுகத்தில் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக, இலங்கையுடன் நீண்ட காலமாக இணைந்து பணியாற்றி வரும் கப்பல் நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கான சாத்தி யக்கூறுகள் குறித்தும் கவனம் செலுத் தப்பட்டது.

நாட்டில் தற்போது போதுமான உண வுக் கையிருப்பு உள்ளதாகவும், எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடி களைக் கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளதாகவும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தினார். இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் ஐரோப்பிய பிராந்தியத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் மத்திய கிழக்கு வழியாக இந்நாட்டிற்கு வருகை தருவ தால், இந்நாட்டின் சுற்றுலாத் துறையின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக விமானப் பயணத்தில் எடுக்கக்கூடிய மாற்று நடவடிக்கைகள் குறித்து தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாக சுற்றுலா அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டிய துடன், அதற்காக தற்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் சேவைகள் அமைச்சின் அதிகாரிகள் விளக்கினர்.

முதலீட்டுத் துறையில் ஏற்படக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது குறித்தும் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அதன்போது திட்டமிட்ட ரீதியில் எடுக் கப்படும் நடவடிக்கைகளின் அவசியத்தை சுட்டிக்காட்டியதுடன், தரவு மையங்கள் போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் முதலீடுகளை ஊக்கு விப்பதற்காக சலுகைப் பொதியை (பெகேஜ்) தயாரிக்குமாறும், டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதி பதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஹான்ஸ் விஜயசூரியவின் தலைமையில் இந்த விடயங்களை ஆராயவும் நிதி அமைச் சுக்கு அறிவுறுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திர கீர்த்தி, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொரு ளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்க முவ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளா தார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச் சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திரராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜி.எம்.ஆர்.ஜி. அபோன்சு, சுங்க பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர் பராக்கிரம திசாநாயக்க ஆகியோருடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபி விருத்தி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை முதலீட்டு சபை போன்ற துறைசார் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## புத்திபூர்வமற்ற அணுகுமுறை

2022 ஆம் ஆண்டில், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் எரிபொருள் இறக்குமதிக்கான அந்நிய செலாவணி பற்றாக்குறை உருவான போது, இலங்கையர்கள் பல நாள்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வெளியே நீண்ட வரிசையில் காத்துக் கிடக்க வேண்டி நேர்ந்தது.

அந்த நெருக்கடி நிலையை அதிக அரசியல் லாபமாக பயன்படுத்திக் கொண்டது ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்திதான். அது வேறு விடயம்.

இப்போதும் மத்திய கிழக்கு யுத்த நிலையை அடுத்து மீண்டும் எரிபொருள் நிலையங்களுக்கு வெளியே வரிசைகள் நீண்டுள்ளன. ஆயினும், போதிய கையிருப்பு இருக்கின்றது என்று அரசு உறுதியுடன் கூறுகிறது. முன்னர் எரிபொருள் பதுக்கலைத் தடுக்க வாகனங்களுக்கு வழங்கப்பட்ட QR code அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறையை இப்போது கொண்டு வரத் தேவையில்லை என அரசு திட்டவட்டமாகக் கூறுகிறது.

என்னதான் போதிய எரிபொருள் இருக்கின்றது என அரசு கூறினாலும் - கட்டுப்பாடு இன்றி கையிருப்பைத் தாராளமாக வாரி வழங்குவோம் என்று அரசு வீம்பாகக் கூறிக் கொண்டு அதனை செயலில் உறுதியாக முன்னெடுத்து நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் - பெற்றோலியப் பொருள்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதால், மக்கள் எரிபொருளை வாங்கிப் பதுக்கி கொண்டாலும் அரச வருவாய் கணிசமாக அதிகரிக்கும் என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டாலும் - தொடர்ந்து எரிபொருள் விநியோகத்தை அரசு வாரி வழங்கும் போது, மக்கள் எரிபொருளை வாங்கிப் பதுக்குவதை நிறுத்தி விடுவார்கள் என்று நம்புவது காரிய சாத்தியமானது அல்ல. யதார்த்த பூர்வமானது அல்ல.

அதுவும் தொடர்ந்து மத்திய கிழக்கு யுத்தம் தீவிரம் அடையும் நிலையில், ஏற்கனவே வாங்கிப் பதுக்கியது போதும் என்ற திருப்தி நிலை வாடிக்கையாளர்களுக்கு வந்து விடும் என்று கருதுவது சாத்தியமானதா என்ற கேள்வி எழுகின்றது.

எது, எப்படியாயினும் மக்களுக்கு எரிபொருள் தேவை தொடர்பான பயம், பீதி இருக்கும் வரை - மத்திய கிழக்கு யுத்தம் தொடரும் வரை- அதை வாங்கிப் பதுக்கும் எண்ணம் மக்கள் மத்தியில் விரைவில் அடங்கி விட மாட்டாது. அந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் அந்நிய செலாவணிக் கையிருப்பை எரிபொருள் கொள்வனவுக்காக அளவுக்கு அதிகம் கரைத்து, நெருக்கடி நிலையை எதிர்கொள்ள நேரிடலாம்.

ஒருபுறம் எரிபொருள் விநியோகத்தை தாராளமாக்கிக் கொண்டு, மறுபுறம் எரிபொருள் கொள்வனவுக்கு QR பங்கீட்டு முறை போன்ற கட்டுப்பாடுகளையும் அரசு கொண்டு வருவது தவிர்க்க முடியாத கட்டாயமாகலாம்.

மத்திய கிழக்கில் தற்போது நிலவும் மோதலால், வெளிநாட்டு உழைப்பாளர்களான இலங்கையரிடம் இருந்து நாட்டுக்கு வெளிநாட்டு நாணயத்தில் வரும் பணம் - அந்நிய செலாவணி வருமானம் - குறுகிய காலத்திற்காவது குறைவடையலாம். இந்த யுத்த நிலைமை ஏற்றுமதி வருமானம் மற்றும் சுற்றுலா பயணிகள் மூலமான வருவாய், இறக்குமதிகளுக்கான அதிக செலவினம் போன்றவற்றிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் நாட்டின் வெளிநாட்டு நாணய இருப்புகளில் கடுமையான அழுத்தம் ஏற்படும். ஆகையால் அந்நிய செலாவணி கரைவதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் நாட்டுக்கு உள்ளது. இந்தச் சமயத்தில், எரிபொருள் பதுக்கலை முறியடிக்கும் திட்டம் என்ற பெயரில் அரசாங்கம் எண்ணெய் இறக்குமதிக்கு அதிக அந்நிய செலாவணியைக் கரைக்க முயற்சிப்பது புத்திபூர்வமானதல்ல.



# அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் யானை பட்டாளம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை நிறைவடைகின்ற நிலையில், யானைகளின் வரவு மீண்டும் அதிகரித்துள்ளது.

இன்று புதன்கிழமை பட்டப்பகலில் காரைதீவு - அம்பாறை பிரதான வீதியில் வளத்தாப்பிட்டி பிரதான வீதி ஊடாக யானைகள்பட்டாளமாகபயணித்துள்ளன.

இதனால், பிரதான வீதியில் பயணித்தவர்கள் சில மணிநேரம் தாமதித்து பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எதிர்வரும் விதைப்பு காலத்துக்கு முன்பதாக இந்த யானைகளின் அட்டகாசம் மேலும் தொடரலாம் என்று மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.



# செஸ் வரியை படிப்படியாக நீக்குவதற்கான தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

இறக்குமதிப் பொருள்கள் மீதான 'செஸ்' வரியை படிப்படியாக நீக்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய தொழில்துறைகளைப் பாதுகாத்தல் மற்றும் வருமானத்தை ஈட்டுதல் போன்ற நோக்கங்களுக்காக, செஸ் வரி உள்ளிட்ட சுங்க வரி அல்லாத பிற இறக்குமதி வரிகள் நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் விளைவாக, இடைநிலை மற்றும் உள்ளீட்டுப் பொருள்களுக்கான அதிக இறக்குமதி செலவு காரணமாக, ஏற்றுமதி சார்ந்த தொழில்களின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது.

இது சர்வதேச சந்தையில் இலங்கைப் பொருட்களின் போட்டித்தன்மையைக் குறைப்பதோடு, ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தியுள்ளது.

எனவே, உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலம் ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்தவும், உலக வர்த்தக அமைப்பின் கொள்கைகளுக்கு இணங்கவும், 2,634 வகைப்படுத்தப்பட்ட குறியீடுகளின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான செஸ் வரியை 2026 முதல் 2029 வரையிலான 4 ஆண்டுகளில் படிப்படியாக நீக்குவதற்கு நிதி அமைச்சராக ஜனாதிபதி மற்றும் தொழில்துறை அமைச்சர் சமர்ப்பித்த கூட்டு முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு ஏப்ரல் 30 இற்கு பின்னர் வெளியீடு

2025 (2026) ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னரே வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டிற்கான விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் 2 கட்டங்களாக நடைபெறவுள்ளன.

இதன்படி முதலாம் கட்டம் மார்ச் 12 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்டம் ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.




சாதாரண தரப் பரீட்சைக்கான செய்முறை பரீட்சைகள் ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளன என ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மதிப்பீட்டு மற்றும் செயன்முறைப் பரீட்சை நடவடிக்கைகள் நிறைவடைந்த உடனேயே, பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதித் திகதி தீர்மானிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத எரிபொருள் விற்பனை; தீவிர நடவடிக்கையில் பொலிஸார்

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள அச்சம் கலந்த கொள்வனவு மற்றும் அது தொடர்பான சட்டவிரோத எரிபொருள் விற்பனைக்கு எதிராக பொலிஸ் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த சில நாள்களில் பல கைதுகளும் நீதிமன்ற நடவடிக்கைகளும் பதிவாகியுள்ளன.

கறுப்புச் சந்தை வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவும், பொது ஒழுங்கைப் பேணவும் நாடு முழுவதும் சுற்றிவளைப்புகள் மற்றும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இந்தநிலையில் புல்மோட்டை நகரில் உரிமம் இன்றி அதிக விலைக்கு டீசல் விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றிரவு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், புல்மோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டார்.

மேற்படி கடையைச் சுற்றி வளைத்த அதிகாரிகள், அங்கிருந்து சட்டவிரோதமாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த 390 லீற்றர் டீசலை பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்டவர் புல்மோட்டை, அர்பத் நகரைச் சேர்ந்த 36 வயதுடைய வராவார், அவர் குச்சவெளி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார்.



# நாட்டின் பல பகுதிகளில் வளித்தரச் சுட்டி பாதிப்பு

## வெளியே நடமாடுவோர் அவதானம்

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இன்று வளித்தரச் சுட்டி ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு, அத்துடன் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், கொலன்னாவை, கோட்டே, கேகாலை மற்றும் காலி ஆகிய இடங்களில் வளித்தரச் சுட்டி ஆரோக்கியமற்ற நிலையில் காணப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் காரணமாக, பொது மக்கள் திறந்தவெளிகளில் நடமாடும் போது அவதானமாக இருக்குமாறும், குறிப்பாக இதய நோய் மற்றும் சுவாசப் பிரச்சினைகள் உள்ளவர்கள் தகுந்த பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சுகாதார நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.





# நிந்தவூர் இமாம் றூமி வீதிக்கு காப்பெட் இடும் பணிகள் ஆரம்பம்

## ஆதம்பாவா எம்.பியால் ஆரம்பித்து வைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமல் இருந்த நிந்தவூர் இமாம் றூமி வீதி தொடர்பாக அந்தப் பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரியப் படுத்தினர். இதனை அடுத்து சுமார் ஒரு கோடி 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில், இந்த வீதிக்கான காப்பெட் இடும் பணி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கரையோரப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவால் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லதீப், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அக்கரைப்பற்றுப் பிராந்திய பிரதம பொறியியாளர் ஏ.எம்.உவைஸ், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் இஸட்.ஏ.எம்.அஸ்மி, நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர்களான எம். சம்சுன் அலி, ஏ. இப்திகார், நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் சிஹாபுதீன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஆசிரியர் எஸ். எம்.ஆரிப் உட்பட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், பிரஜாசக்தியினுடைய நிந்தவூரின் தவிசாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# தலவாக்கலை சென் கிளையார் நீர் வீழ்ச்சி பகுதியில் தீ பரவல்!

(மஸ்கெலியா நிருபர்)

இயற்கை எழில் கொஞ்சும் தலவாக்கலை பகுதியில் உள்ள சென் கிளையார் நீர் வீழ்ச்சி பகுதியில் உள்ள மாணா பற்றைக்கு விஷமிகள் தீ வைத்துள்ளனர்.

அதன் காரணமாக அந்தப் பகுதி ஒரே புகை மண்டலமாக காட்சி அளிக்கிறது.

நேற்றுக் காலை வேளையில் இந்தப் பகுதியில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சென் கிளையார் நீர் வீழ்ச்சியின் எழில் கொஞ்சும் தோற்றம் மங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள அனைத்து இயற்கை காட்சிகளையும் பார்க்க உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிக அளவில் வந்து செல்கின்றனர். இவ்வாறான இயற்கை எழில் கொஞ்சும் பகுதியில் பாரிய தீ பரவல் காரணமாக இயற்கை காட்சி அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகக் கடும் வெப்பமான காலநிலை நிலவுகிறது. இதன் காரணமாக மத்திய மலைநாட்டில் பல்வேறு பகுதிகளில் வன பகுதியில் தீ வைப்பது அதிகரித்து வருகிறது.

இவ்வாறு சட்ட விரோதமாக தீ வைப்பதால் நீர் ஊற்றுகள், வன ஜீவராசிகள் அழிவடைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.



# கொட்டகலை ஆசிரிய கலாசாலையில் பழைய மாணவ ஆசிரியர் ஒன்றுகூடல்

**(பசறை நிருபர் நடராஜா மலர்வேந்தன்)**

கொட்டகலை அரசினர் ஆசிரிய கலாசாலையில் 2004 -2006 ஆம் கல்வியாண்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஓய்வு நிலையில் உள்ள கலாசாலை முதல்வர் எஸ். ஜெயகுமார், திருமதி சந்திரலேகா கிங்ஷிலி, ஆரம்பக்கல்வி விரிவுரையாளர் எஸ். செல்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு தற்போது கலாசாலையில் விரிவுரையாளர்களாக சேவையாற்றி வரும் சிவனு மனோகரன் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருந்த ஆசிரியர்கள் தங்கள் பயிற்சி காலத்தின் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

இதன்போது கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்து பின்னர் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் பரீட்சையில் சித்தியடைந்து விரிவுரையாளர்களாக தற்போது சேவையாற்றுகின்ற ரி. தியாகராஜா, ஜி.மோகன்ராஜ் மற்றும் திருமதி என்.சாமிளா ஆகியோர் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர்.







# பிரித்தானியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு

(அஷ்ரப் ஏ சமத்)

பிரித்தானிய தூதரகத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு கொழும்பில் அமைந்துள்ள வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதர் அன்ரூ பட்ரிக், பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலி, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்–ஷைக் எம். அர்கம் நூராமித் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹிஸ்புல்லாஹ், முஜிபு ரஹ்மான், முன்னாள் அமைச்சர் அலி சப்ரி உட்பட கல்வியியலாளர்கள், வர்த்தக சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட இலங்கை முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பலர் கலந்து கொண்டனர்.











# களுவாஞ்சிகுடி வைத்தியசாலைக்கு நவீன கண் பரிசோதனை இயந்திரம்!

## நன்கொடையாக வழங்கியது கொமர்ஷல் வங்கி

(ஜதுர்சயன்)

கொமர்ஷல் வங்கியால் களுவாஞ் சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு நவீன கண் பரிசோதனை இயந்திரம் நன்கொடையாக வழங்கி வைக் கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ் சிகுடி ஆதார வைத்தியசாலையின் சேவைகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், கொமர்ஷல் வங்கியால் சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான நவீன கண் பரிசோதனை இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வைத்திய அத்தியட்சகர் கே..புவ னேந்திரநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு குறிப்பிட்ட இயந்தி ரத்தை உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தனர்.

இதன்மூலம் நோயாளிகளுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும் என்று களுவாஞ்சிகுடி வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# சுற்றுச்சூழல் சட்டம் தொடர்பாக தெளிவூட்டல் கலந்துரையாடல்

(பூ.லின்ரன்)

புதிய சுற்றுச்சூழல் சட்டம் தொடர்பாக தெளிவூட்டும் கலந்துரையாடல் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் அமைச்சின் மேலதிக செயலாளர் ரவீந்திர காரியவசம் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசா அதிபர் நளாயினி இன்பராஜ், மாவட்டத் தின் நான்கு பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், வனவளத் திணைக்களத்தி னர், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# ஹற்றன் - தலவாக்கலை மாணவர்களுக்கு பஸ்சேவை உத்தியோக பூர்வமாக ஆரம்பம்!

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

ஹற்றன் – தலவாக்கலை மாணவர்களுக்கு “சிசு செரிய” பஸ் சேவை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.ஹற்றனில் இருந்து தலவாக்கலைவரை பயணிக்கும் அனைத்து பாடசாலை மாணவர்களதும் போக்குவரத்து வசதிக்காக, அரசால் அங்கீகரிக்கப்பட்ட “சிசு செரிய” பஸ் சேவை நேற்று கொட்டகலை கேம்பிரிட்ஜ் தமிழ் மகா வித்தியாலயத்தில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஹற்றன் முதல் தலவாக்கலை வரை இந்தச் சேவை இடம்பெறவுள்ளது. போக்குவரத்து கட்டணத்தில் 50 சதவீதத்தை அரசு ஏற்கும். மாணவர்கள் மீதமுள்ள அரைவாசி கட்டணத்தை மாத்திரம் செலுத்தினால் போதுமானது.

கிஷான் பிரதர் டிராவல்ஸ் நிறுவனம் இதனை முன்னெடுக்கிறது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி கலந்து கொண்டார்.

தோட்டப்புற மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சலுகை விலையிலான போக்குவரத்து சேவையை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி இதன்போது தெரிவித்தார்



# மனிதாபிமான, இறையாண்மை அடிப்படையில் ஒன்றுபட்ட குரலை வெளிப்படுத்துதல் வேண்டும்!

## காலத்தின் கட்டாயம் என்கிறார் கலீலுர் ரஹ்மான்

(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச சட்டங்களையும், ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அடிப்படை கோட்பாடுகளையும் வெளிப்படையாக மீறி, ஈரான் இஸ்லாமிய குடியரசின் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல் மற்றும் அதன் விளைவாக அந்த நாட்டின் ஆன்மீகத் தலைவரான அயதுல்லாஹ் செய்யித் அலீ /ஹுசைனி கமேனி மரணம் அடைந்த செய்தி எம்மை ஆழ்ந்த துயரத்திலும் கடும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புனித ரமழான் மாதத்தின் ஆன்மிகப் புனிதத்தையும், மனிதாபிமானக் கோட்பாடுகளையும் புறக்கணித்து மேற்கொள்ளப்பட்ட இத்தகைய அத்துமீறிய தாக்குதல், ஒரு நாட்டின் உலக சமாதானத்துக்கு நேரடியான சவாலாகும். எந்த காரணத்தாலும் ஒரு சுயாட்சி நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் இராணுவ தலையீடு செய்வது சர்வதேச ஒழுங்கை பாதிக்கும் அபாயகரமான முன்னுதாரணமாகும்.



ஐக்கிய சமாதான கூட்டமைப்பு இந்தத் தாக்குதலை மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது. சர்வதேச அரசியல் மேடைகளில் இரட்டை நிலைப்பாடுகள் கடைப்பிடிக்கப்படுவதும், பலவீனமான நாடுகள்மீதான அழுத்த அரசியல்தொடரப்படுவதும் உலகளாவிய அமைதி மற்றும் நீதிக்குத் தீங்கு விளைவிக்கின்றன என்பதை வலியுறுத்துகிறோம்.

முஸ்லிம் நாடுகள் இந்தச் சூழலில் தங்களது அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து, பொதுவான மனிதாபிமான மற்றும் இறையாண்மை அடிப்படைகளில் ஒன்றுபட்ட குரலை வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு போன்ற சர்வதேச இஸ்லாமிய அமைப்புகள் உடனடி அவசரக் கூட்டங்களை ஏற்பாடு செய்து, நிலைமையை பரிசீலித்து, தெளிவான மற்றும் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இந்த விவகாரத்தில் தன்னிச்சையான மற்றும் பாகுபாடற்ற விசாரணையை மேற்கொண்டு, சர்வதேச சட்ட மீறல்களுக்கு பொறுப்பான தரப்புகளை அடையாளம் கண்டு, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

உலக நாடுகள் அனைத்தும் தங்க எது அரசியல் மற்றும் பாதுகாப்பு உத்திகளை மறுபரிசீலனை செய்து, மோதல்களை விட கலந்துரையாடல் மற்றும் தூதரக முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். மேலும் வன்முறைகள் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகள் மத்திய கிழக்கு பிராந்தியத்தையும் உலக சமாதானத்தையும் தீவிர அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் அபாயம் காணப்படுகிறது.

அயதுல்லாஹ் செய்யித் அலீ ஹுசைனி கமேனியின் மறைவு, ஈரான் நாட்டுக்கே மட்டுமல்லாது, உலக முஸ்லிம் சமுதாயத்துக்கும் ஒரு பெரும் இழப்பாகும். அவர்களின் குடும்பத்தாருக்கும், ஈரான் மக்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீதி, இறையாண்மை, சமாதானம் மற்றும் மனித மரியாதை ஆகியவை நிலை நிறுத்தப்பட வேண்டிய அடிப்படை உலக மதிப்புகளாகும். அவற்றைப் பாதுகாக்க உலக நாடுகள் ஒன்றுபட்டு செயல்பட வேண்டியது அவசியமாகும்.- என்றுள்ளது.





# அம்பாறை அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பணிப்பாளர் ய. அனிருத்தனன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அறநெறிக்கு பொறுப்பான உதவி பணிப்பாளர் திருமதி அனந்தா அம்பிகைபாகன் கலந்து கொண்டு அறநெறிப்பாடசாலைகளின் நோக்கம், எதிர்கால நடவடிக்கைகள், ஆசிரியர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார். மேலும் ஆக்கத்திறன் போட்டிகள், குருபூசை நிகழ்வுகள் மற்றும் புதிய மாணவர்களை அறநெறிக் கல்வியில் இணைக்கும் திட்டங்கள்



பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

சிறப்பு அதிதியாக காரைதீவு பிரதேச செயலக உதவி பணிப்பாளர் பே. பிரணவரூபன் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத் தலைவர் மற்றும் திருக்கோவில் பிரதேச வலயக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ. ஸ/ரநுதன், காரைதீவு இந்துசமய விருத்திச்சங்க தலைவர் எஸ். சிவராஜா, மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி. குணநாயகம் மற்றும் உறுப்பினர் எஸ். சிவாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அறநெறிப்பாடசாலை புதிய பாடத்திட்டம் தொடர்பான விளக்க உரையை அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி நிகழ்த்தினார். மேலும் அறநெறிப்பாடசாலைகளை நடத்தும் போது பின்பற்ற வேண்டிய கற்பித்தல் முறைகள், விளையாட்டுகள் மற்றும் கற்பித்தல் உத்திகள் தொடர்பாக சைவப்பண்டிதர் வளவாளர் யோ. கஜேந்திரா விளக்கமளித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அட்டாளச்சேனை, நிந்தவூர், காரைதீவு, லாகுகல, சம்மாந்துறை, கல்முனை வடக்கு மற்றும் நாவிதன்வெளி உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 348 ஆசிரியர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.













# ஈரான் – அமெரிக்கப் போரை நிறுத்துவதற்கான அமைதி முயற்சியை இந்தியா எடுக்க வேண்டும்

## கொம்யூனிஸ்ட் - வி.சி.க. கட்சிகள் வலியுறுத்தல்

ஈரான் – அமெரிக்க போரை நிறுத்த பிரிக்ஸ் நாடுகளுடன் சேர்ந்து அமைதிக்கான முயற்சியை இந்திய அரசு எடுக்க வேண்டும் என்று கொம்யூனிஸ்ட் – வி.சி.க. கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்தும் போரை கண்டித்து கொம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், வி.சி.க. தலைவர் திருமாவளவன் ஆகியோர் கலந்துகொண்டு போரை உடனடியாக நிறுத்த வேண்டும், யுத்தம் வேண்டாம் அமைதி வேண்டும், இந்திய அரசு தலையிட்டு போரை நிறுத்த வேண்டும் என கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் பெ.சண்முகம், மு.வீரபாண்டியன், திருமாவளவன் ஆகியோர் கருத்து தெரிவிக்கையில் ,

“அமெரிக்காவின் யுத்த வெறியாலும், இஸ்ரேலின் இனவெறியாலும் மத்திய கிழக்கு பற்றி எரிகிறது.

லட்சக்கணக்கான அப்பாவி மக்கள், குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அலறல் சத்தம் உலகத்தின் மனசாட்சியை உலுக்கி எடுக்கிறது. போர் நியதிகள், ஐ.நா. விதிகளை மீறி மனிதகுலத்தின் எதிரி என்பதை அமெரிக்க ஏகாதிபத்தியம் மீண்டும் நிருபித்துள்ளது.

இந்த விவகாரத்தில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா பார்வையாளராக இருக்கிறது. லட்சக்கணக்கான இந்தியர்கள், தமிழர்கள் வாழ்வாதரத்துக்காக அங்கே சென்று பணிபுரிகின்றனர்.

அவர்களை பத்திரமாக மீட்க வெளியுறவுத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். அணி சேரா நாடுகளின் முன்னணி நாடு என்ற முறையில் இந்திய அரசு, ரஷ்யா, சீனா போன்ற பிரிக்ஸ் நாடுகளுடன் இணைந்து உடனடியாக அமைதிக்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற 13 மாதங்களில் 7 நாடுகள் மீது குண்டுகள் வீசி அப்பாவி மக்களை கொல்வதை வாடிக்கையாக வைத்துள்ளார். போர் தொடர்ந்து நடைபெற்றால் கச்சா எண்ணெய் விலை உயரும், அனைத்து பொருள்களின் விலையும் கடுமையாக உயரும்.

இந்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு அமெரிக்கா, இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அமைச்சரவையை கூட்டி போர் நிறுத்தத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இந்தியாவில் உள்ள ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து போர் நிறுத்ததுக்கு குரல் கொடுக்க வேண்டும்.” என்று தெரிவித்தனர்.






# டெஹ்ரானில் இந்திய மாணவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றம்

## இந்தியத் தூதரகம் ஏற்பாடு

டெஹ்ரான் நகரிலுள்ள இந்திய மாணவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தை செறிவூட்டி வருவதாகக் குற்றம்சாட்டி, ஈரானில் கடந்த சனிக்கிழமை முதல் அமெரிக்க – இஸ்ரேல் கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதையடுத்து ஈரானும் பல்வேறு அமெரிக்க விமான தளங்களை குறிவைத்து பதில் தாக்குதல் தொடுத்து வருகிறது. இந்நிலையில் டெஹ்ரான் நகரிலுள்ள இந்திய மாணவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு இந்தியத் தூதரகம் நேற்று மாற்றியுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள தூதரக அதிகாரிகள் செய்துள்ளனர்.

இதுகுறித்து டெஹ்ரான் நகரில் செயல்பட்டு வரும் இந்தியத் தூதரகம் சார்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“போர்ப் பதற்றம் காரணமாக டெஹ்ரான் நகரிலுள்ள இந்திய மாணவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றியுள்ளோம்.

டெஹ்ரானுக்கு வெளியே அமைந்துள்ள இடங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த இடமாற்றத்தை விரும்பாத சில மாணவர்கள் மட்டும் டெஹ்ரானிலேயே தங்கியுள்ளனர்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



## போர்ப் பதற்றம் அதிகரிப்பு:

# 149 பயணிகளுடன் டுபாயில் இருந்து டில்லிக்கு வந்த ஏர் இந்தியா விமானம்

போர்ப் பதற்றத்துக்கு இடையே டுபாயிலிருந்து டில்லிக்கு நேற்று முதலாவது ஏர் இந்தியா விமானம் வந்திறங்கியது.

ஈரான் மீது இஸ்ரேல்- அமெரிக்கா ஆகிய நாடுகள் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. இதனால், விமான சேவைகள் முற்றிலும் முடங்கின. இதனால் பலர் தாய் நாடுகளுக்கு திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர்.

இந்த போர்ப் பதற்றத்துக்கு இடையே நேற்று முன்தினம் மாலை முதல் ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாய் நகரம், சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இருந்து குறைந்த எண்ணிக்கையிலான விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அபுதாபியில் இருந்து ஒரு விமானம் நேற்று காலை டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. இதில் 149 பயணிகள் வந்தனர்.

அதேபோல மற்றொரு விமானம் அபுதாபியில் இருந்து கிளம்பி மும்பையில் நேற்று தரையிறங்கியது. டில்லி இந்திரா காந்தி விமான நிலையத்திலிருந்து வெளியே வந்த பயணிகளைக் கண்டதும் அவர்களது குடும்பத்தார், உறவினர்கள் கட்டியணைத்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.



# ஹார்முஸ் ஜலசந்தியில் முடங்கிய 700 கப்பல்கள்: பல நாடுகளுக்கான எண்ணெய் விநியோகம் பாதிப்பு

இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக சுமார் 700 டேங்க்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் முடங்கி உள்ளன. இதனால் உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த சனிக்கிழமை முதல் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு ஈரான் இராணுவமும் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தப் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் உலக நாடுகளுக்கு செல்லும் கச்சா எண்ணெய் கப்பல் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது. இதனால் கிழக்கு-மேற்கு இடையிலான 86 வீத எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, எரிசக்தி சந்தை பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது.


கடற்படை பகுப்பாய்வு நிறுவனங்களான விண்ட்வர்ட் மற்றும் கெப்லர் தரவுகளின்படி, இந்த நீர்வழிப்பாதை அதிகாரப்பூர்வமாக மூடப்படவில்லை என்றாலும், நடைமுறையில் அது முடங்கியே உள்ளது.

மார்ச் 1 ஆம் திகதி 28 லட்சம் பேரல் எண்ணெயைச் சுமந்து சென்ற மூன்று கப்பல்கள் மட்டுமே ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்தன. இது 2026 இன் தினசரி சராசரியான 1.98 கோடி பேரல்களில் இருந்து 86 வீத சரிவாகும். மார்ச் 2 ஆம் திகதி அதிகாலை நிலவரப்படி, ஒரு சிறிய டேங்கர் மற்றும் ஒரு சரக்குக் கப்பல் மட்டுமே பிரதான பாதையில் நகர்ந்தன.

ஈரான் நாட்டைச் சேராத சுமார் 706 டேங்கர் கப்பல்கள் தற்போது ஜலசந்தியின் இருபுறமும் வரிசையாக நிற்கின்றன. இதில் 334 கச்சா எண்ணெய் தாங்கிகள், 109 கச்சா எண்ணெய் சுத்திகரிப்புப் பொருள்கள் கொண்ட கப்பல்கள் மற்றும் 263 சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் கப்பல்கள் அடங்கும். மேலும் 26 கப்பல்கள் சரியான இலக்கின்றி வளைகுடா பகுதிக்குள் மிதக்கின்றன.

ஓமன் வளைகுடாவிலும் நூற்றுக் கணக்கான கப்பல்கள் முடங்கி உள்ளன. எண்ணெய் சந்தையில் இதன் தாக்கம் உடனடியாகப் பிரதிபலித்தது. சவூதி அரேபியாவின் ராஸ் தனுரா சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கட்டாரின் எல்.என்.ஜி. ஆலை மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து, ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலை 10 வீதம் உயர்ந்து ஒரு பேரல் 80 டொலராகவும், ஐரோப்பிய எரிவாயு விலை 40 வீதத்துக்கும் அதிகமாகவும் உயர்ந்தது.

இந்த முடக்கம் சில நாள்களுக்குத் தொடர்ந்தால், கப்பல்களின் வரிசை அதிகரிக்கும் மற்றும் விநியோகம் முற்றிலும் சீர்குலையும். வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்கான காப்பீட்டுத் தொகை ஏற்கெனவே பலமடங்கு உயர்ந்துள்ளது. இது உலகளாவிய எரிபொருள் விலையில் பெரும் உயர்வை ஏற்படுத்தும்.



# அமெரிக்காவின் மிகப் பெரிய ரேடார் அழிக்கப்பட்டது; ஈரான் படை அறிவிப்பு

அமெரிக்காவின் மிகப் பெரிய ரேடாரை அழித்துவிட்டோம் என ஈரான் இராணுவம் தெரிவித்துள்ளது.

கட்டார் தலைநகர் டோஹாவில் அமெரிக்காவின் மிகப்பெரிய விமானப் படைத் தளம் உள்ளது. அங்கு 10,000 இற்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் முகாமிட்டு உள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் நிலை நிறுத்தப்பட்டு உள்ளன.

டோஹா விமானப் படைத்தளத்தில் இருந்து புறப்படும் அமெரிக்க போர் விமானங்கள், ஈரான் மீது குண்டுமழை பொழிந்து வருகின்றன.

இந்த சூழலில் தோஹா விமானப் படைத் தளத்தில் நிறுவப்பட்டிருந்த அமெரிக்காவின் ஏஎன்ஃஎப்பிஎஸ்-132 என்ற அதிநவீன ரேடாரை ஏவுகணை தாக்குதல் மூலம் அழித்துவிட்டதாக ஈரான் கூறியுள்ளது.

இதுதொடர்பாக அந்த நாட்டு இராணுவம் வெளியிட்ட அறிக்கையில்,

“அமெரிக்காவின் ஏஎன்ஃஎப்பிஎஸ்-132 ரேடார் சுமார் 5,000 கிலோ மீற்றர் தொலைவு வரை கண்காணிக்கும் திறன்கொண்டது. கட்டாரில் நிறுவப்பட்டிருந்த இந்த ரேடாரை ஏவுகணை மூலம் அழித்துவிட்டோம்.” என கூறப்பட்டுள்ளது.



# அமெரிக்கத் தாக்குதலில் கொல்லப்பட்ட 165 பேருக்கு ஒரே இடத்தில் கல்லறை

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பாடசாலை மாணவிகள் உட்பட 165 பேருக்காக வரிசையாகத் தோண்டப்பட்டுள்ள கல்லறைகளின் புகைப்படத்தை ஈரான் அரசு வெளியிட்டுள்ளது.

ஈரானின் மினாப் நகரில் உள்ள மிகப்பெரிய இராணுவ தளத்தை குறிவைத்து, கடந்த 28 ஆம் திகதி இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதில் இராணுவ தளம் அருகே உள்ள பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் உட்பட 165 பேர் உயிரிழந்தனர்.

ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்சி தனது ‘எக்ஸ்“ சமூக வலைதளத்தில் மக்களின் மனசாட்சியை உலுக்கும் ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்துள்ளார்.

அதில், திறந்தவெளி மைதானம் ஒன்றில் வரிசை வரிசையாக நூற்றுக்கணக்கான கல்லறைகள் தோண்டப்பட்டு, சுண்ணாம்புப் பொடியால் அடையாளமிடப்பட்டுள்ளன

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“அமெரிக்க – இஸ்ரேல் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட மாணவிகள் உள்ளிட்டோருக்காக இந்தக் கல்லறைகள் தோண்டப்படுகின்றன.

அவர்களின் உடல்கள் சிதறிப் போயுள்ளன. காசா முதல் மினாப் வரை அப்பாவி மக்கள் ஈவு இரக்கமின்றி படுகொலை செய்யப்படுகின்றனர்.” என குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு உள்ளான பள்ளியில் மீட்புப் பணியாளர்கள் சிதைந்த கொன்கிரீட் இடிபாடுகளுக்கு இடையே தேடுதல் நடத்துவதும், அங்கிருந்து பாடசாலை பைகள் மீட்கப்படுகின்றமை காணொலிகளில் பதிவாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையில் இதுகுறித்து முறையிட்டுள்ள ஈரான், பொதுமக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல் இது என்றும், இதனை ‘போர்க்குற்றம்“ மற்றும் ‘மனிதகுலத்துக்கு எதிரான குற்றம்“ என்றும் சாடியுள்ளது.

பக்கம் 03

கனடா முரசு

புதன்கிழமை | 04/03/2026

கனடியப் பிரதமர் மார்க் கார்னி அவுஸ்திரேலியாவிற்கு விஜயம்



02



# அமெரிக்காவின் தாக்குதலுக்கு வருத்தத்துடன் கனடா ஆதரவு

## பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

ஈரான் மீது அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல்களுக்கு வருத்தத்துடன் ஆதரவு அளிப்பதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல்கள் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கு தொடர்ந்து பலவீனமடைந்து வருவதை வெளிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தாக்குதல்கள் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்ததிலிருந்து முதல் முறையாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கார்னி, இந்த நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்தை மீறியிருக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

எங்களுக்கு முன்கூட்டியே தகவல் வழங்கப்படவில்லை.இதில் பங்கேற்குமாறு எங்களிடம் கோரப்படவும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்துடன் ஒத்துப்போவதாக தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வார இறுதியில், பெரும்பாலான ஐரோப்பிய கூட்டாளிகள் எச்சரிக்கையுடன் நடந்துகொண்ட நிலையில், அமெரிக்க தாக்குதல்களுக்கு கார்னி வெளிப்படையாக ஆதரவு தெரிவித்திருந்தார்.

பின்னர் இத்தாக்குதல்களில் இஸ்ரேலும் இணைந்தது. இதனையடுத்து, பொதுமக்கள் பாதுகாப்பும், நாட்டின் இறையாண்மையும் காக்கப்பட வேண்டும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி வலியுறுத்தினர்.

# எரிபொருள் விநியோகம் தொடர்பில் கனடாவின் உதவியை நாடும் நாடுகள்

எரிபொருளுக்காக கனடாவின் உதவியை சில நாடுகள் நாடியுள்ளதாக கனடாவின் எரிசக்தித்துறை அமைச்சரான டிம் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தாக்குதல், அதற்கு ஈரான் கொடுத்துவரும் பதிலடியால் கச்சா எண்ணெய், எரிபொருள் விடயத்தில் பிரச்சினை உருவாகியுள்ளது.

பொதுவாகவே, போர் தொடங்கினால், அந்தப் போர் நேரடியாக போரில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகளை மட்டுமின்றி மற்ற நாடுகளையும் பாதிக்கும்.





குறிப்பாக, எண்ணெய் விலை உயரும். அப்படியிருக்கும்போது, மத்திய கிழக்கு பகுதியில் உருவாகியுள்ள மோதலால் எண்ணெய் மற்றும் எரிபொருள் விலை அதிகரிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மொத்த எண்ணெயில் 20 சதவிகிதம் ஹோர்மூஸ் ஜலசந்தி வழியாகத்தான் கொண்டுவரப்படுகிறது. இந்த ஹோர்மூஸ் ஜலசந்தி, ஈரான் மற்றும் ஓமான் நீர்ப்பரப்பில் அமைந்துள்ளது.

ஈரான் மீதான அமெரிக்க

02




# கனடியப் பிரதமர் மார்க் கார்னி அவுஸ்திரேலியாவிற்கு விஜயம்

கனடிய பிரதமர் மார்க் கார்னி, அவுஸ்திரேலியாவிற்கு அதிகாரப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார். வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் இரு நாட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கமாகக் கூறப்படுகிறது.

கனடிய நேரப்படி திங்கள் கிழமை மாலை மற்றும் அவுஸ்திரேலிய நேரப்படி செவ்வாய்க் கிழமை நண்பகலில், அவர் சிட்னி நகரை அடைந்தார்.

சிட்னியில் தொழில்துறை தலைவர்களுடன் சந்திப்பு நடத்தவுள்ள அவர், பின்னர் நாளை வியாழக்கிழமை தலைநகர் கன்பெராவுக்கு சென்று அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

வார இறுதிக்குள் அவர் அவுஸ்திரேலிய பிரதமர் அன்தனி அல்பானீஸை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில நாள்களாக ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்காத கார்னியின் அலுவலகம், இந்தியாவில் நடைபெற்ற அவரது சந்திப்பிற்குப் பின்னர் திட்டமிடப்பட்ட செய்தியாளர் சந்திப்பையும் ரத்து செய்தது.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஒட்டாவா மற்றும் கன்பெரா இடையே ஒரு முக்கிய பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

அதன் படி, கனடா தனது ஆர்க்டிக் பிராந்திய பாதுகாப்பிற்காக அவுஸ்திரேலியாவிலிருந்து அமைப்பை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.





## எரிபொருள் விநியோகம்...

(A1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இஸ்ரேல் தாக்குதலைத் தொடர்ந்து, ஹோர்மூஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளதுடன், ஏதாவது கப்பல் அந்த பகுதிக்குள் நுழைந்தால் அதை தீவைத்துக் கொளுத்திவிடுவோம் என்றும் எச்சரித்துள்ளது.

ஹோர்மூஸ் ஜலசந்தி வழியாக எண்ணெய் மற்றும் எரிவாயு கொண்டு செல்லப்படும் கப்பல்கள் அனுமதிக்கப்படவில்லை என்றால், ஓரிரு நாள்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு இருக்காது.

ஆனால், அதுவே ஐந்து நாள்கள், ஒரு வாரம் என நீடித்தால், ஹோர்மூஸ் ஜலசந்தியின் இருபக்கங்களிலும் கப்பல்கள் காத்து நிற்க, உண்மையாகவே அது உலகின் பொருளாதாரத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தத் துவங்கும் என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில், எண்ணெய் மற்றும் எரிபொருளுக்காக கனடாவின் உதவியை சில நாடுகள் நாடியுள்ளதாக கனடாவின் எரிசக்தித்துறை அமைச்சரான டிம் தெரிவித்துள்ளார்.

ஈரான் போரால் ஏற்பட்டுவரும் எண்ணெய் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய, கனடாவால் உதவ முடியுமா என்று கேட்டு பல்வேறு நாடுகளிலிருந்து தனக்கு தொலைபேசி அழைப்புகள் வந்துகொண்டிருப்பதாக டிம் தெரிவித்துள்ளார்.

மேலும், திடீரென இப்படி ஒரு கோரிக்கை வந்துள்ளதால், அதற்கு பதிலளிக்க கனேடிய எண்ணெய் மற்றும் எரிபொருள் உற்பத்தியாளர்களுக்கு சிறிது கால அவகாசம் தேவை என்று கூறியுள்ள அவர், திடீரென எண்ணெய் அல்லது எரிபொருள் தயாரிப்பை அதிகரிக்க இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணம் எண்ணெய் வளம் மிக்க மாகாணம் என்பதை பலரும் அறிந்திருக்கக் கூடும்.

உலகிலேயே அதிக எண்ணெய் வளம் கொண்ட நாடுகளில், கனடா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள நாடு என அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது..

# கனடிய எதிர்க்கட்சித் தலைவர் ஐரோப்பாவுக்கு சுற்றுப்பயணம்

கனடாவின் எதிர்க்கட்சித் தலைவரான பியர் பொய்லிவ்ரே தனது ஐரோப்பிய சுற்றுப்பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

இந்தப் பயணத்தில் அவர் ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராக பதவி ஏற்றபின் மேற்கொள்ளும் அவரது முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும். இப்பயணத்தின் போது தன்னுடன் ஒத்த கருத்துக்களை பகிரும் அரசியல் தலைவர்களையும், வர்த்தக வட்டாரங்களையும் சந்தித்து, பிரதமர் மார்க் கார்னி முன்வைக்கும் அரசியல் – பொருளாதார காட்சியமைப்புக்கு மாற்றாக தனது பார்வையை முன்வைக்கப் போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



லண்டனில் 1832ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியினரின் முக்கிய மையமாக விளங்கும் உறுப்பினர்களுக்கான தனியார் கழகமான கார்ல்டன் கழக வளாகத்தில் மாலை நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் பொய்லிவ்ரே உரையாற்றினார்.

கனடா, பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய கொமன்வெல்த்நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் நடைபெற்ற நிகழ்வில், முக்கிய கனிம வளங்கள், பாதுகாப்பு கொள்முதல் மற்றும் தொழில்முறை தகுதிச் சான்றிதழ்களை பரஸ்பரம் அங்கீகரிக்கும் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

லண்டனில் பணியாற்றும் ஒரு செவிலியர் அல்லது மருத்துவர், கனடாவின் ஒன்டாரியோ மாகாண லண்டனிலும் அதே தகுதியுடன் பணியாற்றக்கூடியவர்தான் என்று அவர் குறிப்பிட்டார்.

லண்டனில் பிரிட்டன் வர்த்தக சமூகத்தினருடன் சந்தித்து “வுநயஅ ஊயயெனய” செய்தியை பகிர்ந்ததாக பொய்லிவ்ரே சமூக வலைதளத்தில் புகைப்படங்களுடன் பதிவிட்டார். எங்கள் கூட்டாளிகளுக்கு தேவையான வளங்கள் கனடாவிடம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சென் போல் மேற்கில் விபத்து; இருவர் மரணம்

கனடாவின் சென் போல் நகரத்தின் மேற்குப் பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் வெளியிட்ட தகவலின்படி, கிழக்கு திசையில் ஹைவே 29 வழியாக சென்றுகொண்டிருந்த குப்பை லொறி, தெற்கு திசைக்கு திரும்ப முயன்ற – டிரெய்லர் வாகனத்தை தவிர்க்கும் முயற்சியில் எதிர்திசை பாதைக்கு விலகியது.

இதன் போது மேற்கு திசையில் வந்த SUV வாகனத்துடன், நேருக்கு நேர் மோதியது.

இந்த விபத்தில் ளுருஏ வாகனத்தை ஓட்டிச் சென்ற 36 வயதுடைய பெண் மற்றும் முன்பக்க பயணியாக இருந்த 44 வயதுடைய ஆண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பின்னிருக்கையில் இருந்த 29 மற்றும் 38 வயதுடைய இரண்டு பெண்களை அவசர சேவைப் பணியாளர்கள் வாகனத்திலிருந்து மீட்டெடுத்து மருத்துவமனைக்கு அனுப்பினர்.

அவர்கள் இருவரும் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். 53 வயதுடைய குப்பை லொறி ஓட்டுநர், சுயபெந சுழயன 105 மற்றும் 110 இடைப்பட்ட பகுதியில் சம்பவ இடத்திலேயே சிகிச்சை பெற்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




விபத்துக்குப் பின்னர் விசாரணை மற்றும் வீதியில் சிதறிய அவசரப் பொருள்களை அகற்றும் பணிகளுக்காக அந்த நெடுஞ்சாலை பல மணி நேரங்கள் மூடப்பட்டிருந்தது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# பாடசாலை மீது துப்பாக்கிச் சூடு மிரட்டல் கனடாவின் உளுகாடோகில் பெண் கைது

கனடாவின் வடக்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள உளுகாடோக் பகுதியில் உள்ள பாடசாலையை குறிவைத்து துப்பாக்கிச்சூடு நடத்துவதாக இணையவழியில் மிரட்டல் விடுத்தமை தொடர்பில் 24 வயதுடைய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சில குடியிருப்பவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்ட சந்தேகத்திற்கிடமான பதிவுகள் குறித்து தகவல் வழங்கியுள்ளனர்.

அந்த பதிவுகளில் பாடசாலையில் பாரிய துப்பாக்கிச்சூடு நடத்துவதாக குறிப்புகள் இருந்தன என கூறப்படுகிறது. இதையடுத்து அதிகாரிகள் மேற்படி பெண்ணை அவரது வீட்டில் கைது செய்தனர்.




விசாரணையின் போது எந்தவித துப்பாக்கிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், சந்தேக நபருக்கு துப்பாக்கி அணுகல் இருப்பதாக நம்பப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 24 வயதுடைய பெண் சில நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவற்றில் துப்பாக்கி வைத்திருக்க தடை உத்தரவும், சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு செல்லக்கூடாது என்ற நிபந்தனைகளும் அடங்குகின்றன. அவர் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளார்.

கனடாவில் பாடசாலை பாதுகாப்பு சமீபகாலங்களில் முக்கிய விவகாரமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.